2026 ஆகஸ்ட் 26 *சுற்றநிருப இல 66/2026*

சகல மாவட்ட ஆணையாளர்களுக்கும்,

**11வது தேசிய சாரணர் ஜம்போரி - 2026**
**தேசிய சாரணர் ஜம்போரிக்கான பதிவு செய்தல்.**

அன்பின் ஆணையாளர்களுக்கு,

2027 ஜனவரி 17 முதல் 23 வரை கொழும்பு ஹோமாகம தியகம மஹிந்த ராஜபக்ஷ விளையாட்டு மைதாயன வளாகத்தல் 11வது தேசிய சாரணர் ஜம்போரியை நடாத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இலங்கையில் சாரணியம் ஆரம்பிக்கப்பட்டு 115 வருடங்களை பூர்த்திசெய்தள்ளதை முன்னிட்டு ஏற்பாடு செய்கின்ற இந்த தேசிய சாரணர் ஜம்போரியில் உள்நாட்டிலிருந்து 10,000 சாரணர்களும், வெளிநாடுகளில் இருந்து 2,000 சாரணர்களின் பங்கேற்புடன் மிகச் சிறப்பம்சங்கள் கொண்ட விசேட கிராமமாக நடாத்துவதற்கு சகல ஏற்பாடுகளுக்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

கீழே குறிப்பிடப்பட்டுள்ள நியதிகளுக்கு ஏற்ப தமது மாவட்டத்தின் மாவட்ட ஏற்பாட்டுக் குழு (District Contingent Management Team) மாவட்ட மட்டத்தில் தயார்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்வதோடு, தங்கள் மாவட்டத்தின் மாவட்ட குழுவை 2026 செப்டெம்பர் மாதம் 05ம் திகதிக்கு முன்னதாக பின்வரும் கூகுல் படிவத்தில் (Goole Form) https://forms.gle/PneuQk9WdkdrpxVP9 ஊடாக தேசிய சாரணர் தலைமையகத்திற்கு கிடைப்பதற்கு ஆவணச்செய்யவும்.

- மாவட்ட குழுவின ஆலோசகர் (மாவட்ட ஆணையாளர்) (District Commissioner)
- மாவட்டத்தின் குழு தலைவர் (District Contingent Leader)
- மாவட்டத்தின் பிரதி குழு தலைவர் (Deputy District Contingent Leader)
- பதிவு மேற்கொள்ளும் உத்தியோகத்தர் ( Online Registration System administrator)

2026 செப்டெம்பர் 30ம் திகதிக்கு முன்னர் சாரணர் விருது (Scout Award) பெற்றுக்கொண்டுள்ள கனிஸ்ட அல்லது சிரேஷ்ட சாரணர் அல்லது பெண் சாரணர்கள் பங்கு பற்றுதளுக்கு தகைமை பெற்றுள்ளனர். அதற்கான விளக்க படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள **மாவட்டத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ள பங்குபற்றுநர்களின் அளவுக்கு** ஏற்ப பதிவினை மேற்கொள்ளல் வேண்டும்.

**பதிவு செயதல் தெடர்பான விபரம்:**

- **கால எல்லை** :- 2026 செப்டெம்பர் 05 முதல் செப்டெம்பர் 30
- **பதிவினை மேற்கொள்ளல்** :- மாவட்டத்தில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள மாவட்ட பதிவாளர் மூலம் சாரணர்கள் மற்றும் ஆணைப்பத்திரம் உள்ள தலைவர்களை பதிவு செய்தல் **2026 செப்டெம்பர் 30ம் திகதிக்கு முன்னர் நிறைவு** செய்தல் வேண்டும்.

இதில் தங்களின் முழுமையான கவனத்தை செலுத்தி, தேவையான பதிவுகளை குறித்த திகதிக்கு முன்னர் மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளவும்.
11வது தேசிய சாரணர் ஜம்போரி பற்றிய மேலதிக விபரங்கள் கொண்ட கையேடு இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

நனிறி,
இங்ஙனம்,
சாரணர் சேவையில்,

வைத்தியர் அசங்க ஏரியாவ அமில் அபேசுந்தர
இணை-ஏற்பாட்டு ஆணையாளர்கள்,

**சட்டத்தரணி மனோஜ் நாணயக்கார** ஜம்போறியின் பிரதம ஆணையாளர்,ஜம்போரி தலைவர்

**நகல்** :- தலைமையக ஆணையாளர்கள்,
தலைவர்,தவிசாளர், கௌரவ செயலாளர், கௌரவ பொருளாளர்- இலங்கை சாரணர் சங்கம்

**இலங்கை சாரணர் சங்கம்,**
**11வது தேசிய சாரணர் ஜம்போறி**
**2027 ஜனவரி 17 - 23**
**ஹோமாகம, தியகம் மஹிந்த ராஜபக்ஷ சர்வதேச விளையாட்டு வளாகத்தில்**

===========================================================

**ஆரம்ப தகவல்கள்,**

11வது தேசிய சாரணர் ஜம்போறி சாகச அனுபவங்கள், புதிய அறிவு மற்றும் சர்வதேசத்தின் நட்பினை வளர்த்தல் போன்ற நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு, தீவு முழுவதும், சர்வதேச அளவில் உள்ள சாரணர்களின் பங்கேற்படன் நடாத்தப்பட உள்ளது.

- **ஜம்போரி நடைபெறும் கால எல்லை :-** 2027 ஜனவரி 17 முதல் 23 வரை
- **ஜம்போரிக்காக வருகைத் தரும் திகதி** :- 2027 ஜனவரி 17
- **ஜம்போரியில் இருந்து வெளியேறும் திகதி:-** 2027 ஜனவரி 23
- **இடம்** :- மகிந்த ராஜபக்ஷ சர்வதேச விளையாட்டு மைதான வளாகம். தியகம.

பல்வேறு செயன்முறை செயற்பாடுகள் மற்றும் வெளிக்கள கூடாரம் அமைத்தலுக்கு வசதியான பாரிய பூமி பிரதேசமாகும். பரந்து காணப்படும் இந்த பூமி பிரதேசத்தில் சாரணர்களின் செயற்பாட்களுக்கான முன்னோடி செயற்றிட்டங்கள், கலாச்சார அறிமுகத்திற்கான சிறந்த சுற்றுச் சூழல் கொண்டதாக அமைகிறது.

**காலநிலைப் பற்றியதான எதிர்வு கூறல்**

ஜனவரி மாதத்தில் இலங்கையின் வறண்ட காலநிலை காணப்படுவதனால், கூடாரம் அமைத்தல் மற்றும் சாரணர் செயற்பாடுகளுக்கு உகந்த வெளிக்களச் செயற்பாடுகள் கொண்ட சிறந்த சுற்றுச் சூழலைக் காலநிலை காணப்படுகின்றது.

- **வெப்பநிலை வரம்பு** : பகல் வேளையில் வெப்பநிலை 27°C மற்றும் 31°C (80°F - 88°F) கொண்டதாகும்.மாலை வேளையின் வெப்பநிலை 22°C மற்றும் 23°C (80°F - 88°F) க்கு குறைவான வசதியான வெப்பநிலையே காணப்படுகினது.
- **மழைவீழ்ச்சி :** காலநிலை எதிர்வு கூறலுக்கு அமைய ஜனவரி மாதத்தில் ஹோமாகம பிரதேசத்தில் மிகக் குறைந்த மழையுடனான வெப்பநிலையை கொண்டுள்ளது. தொடர் மழை பெய்யும் சாத்தியக் கூறுகள் அறிதாகவே காணப்படுகின்றது. சில்சந்தர்ப்பங்களில் மழை பெய்தாலும் அது சிறிய மழையாகவே இருக்கும்.
- **சூரிய ஒளிமற்**றும் ஈரப்பதன் :- பங்கேற்பாளர்களுக்கு மேல் மாகாகணத்தில் சாதாரண ஈரப்பதன் கொண்ட வாராந்தம் சூரிய ஒளி தென்படக் கூடியதாக இருக்கும்.

**விசேஷ கவனத்திற்கு**

தற்போது உலகளாவிய காலநிலை மாற்றத்தால் மிகவும் பாதிக்கப்பட்டுள்ள நாடுகளில் ஒன்றாக இலங்கை அடையாளம் காணப்பட்டுள்ளது. அதன்படையில் மேற்கூறிய காரணிகள் இப்பகுதியிலும் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தக் கூடும். உள்ளுர் மற்றும் சர்வதேசத்தின் பொது கருத்தின் அடிப்படையில், இது தொடர்பாக அவ்வப்போது அறிவிப்புக்கள் மேற்கொள்ளப்படும்.

**ஜம்போரி செயல்பாடுகள்**


65/9, Sir Chittampalam A Gardiner Mawatha, Colombo 02, Sri Lanka +94 112 433 131 / 512 info@jamboree.scout.lk jamboree.scout.lk

சாரணர்களின் தனிநபர் அபிவிருத்திக்கு ஏற்ற வகையில் ஒவ்வொரு அம்சத்தையும் உள்ளடக்கும் வகையில்,ஜம்போரியின் செயல்பாடுகளை ஐந்து முக்கிய நோக்கங்களை மையமாகக் கொண்டுள்ளன.

🌍 **நிலம் சார்ந்த செயல்பாடுகள் (பூமி)** சவால்களுக்க ஈடுகொடுக்கும் தறன்,சுற்றாடலை பாதுகாகத்தல், களஆய்வுகள் என்பன

🌊 **நீரியல்சார்** நீரியல்சார்ந்த செயல்பாடுகள், நீரியல் வலங்களை பாதுகாத்தல்,மற்றும் கடல்வள பாதுகாப்பு.

✈ **வான்வழி** : கயிற்றுடனான செயல்பாடுகள், ஆகாய மார்க்க விளையாட்டுகள், விமான அறிவியல் தொகுதிகள்.

🚀 **எதிர்கால உலகம் :-** STEM புத்தாக்கம், டிஜிடல் மயமாக்கல், றோபோட்டிகள் மற்றும் நிலையான தொழில்நுட்பம்,

🕊 **ஆன்மீகம் :-** அமைதியை உருவாக்குதல்,சொந்த உணர்வை வளர்த்தல் நம்பிக்கையும் ஓர் பன்பாட்டு கலாச்சார உரையாடலும் சிந்தனையும்.

**மேலும்,எரினா நிகழ்ச்சிகள், கலாச்சார நிகழ்ச்சிகள், இசை நிகழ்ச்சிகள், கல்விசார் கண்காட்சிகள், சமூக சேவைத்திட்டங்கள் உட்பட பல்வேறு அனுபவங்களை உள்ளடக்கிய நிகழ்வுகளில்** சகல சாரணர்களும் பங்கேற்று 11வது தேசிய சாரணர் ஜம்போரியில் பல்வேறு அனுபவங்களை பெற்றுக்கொள்ளும் சந்தர்பம் எதிர்பாரக்கப்படுகிறது.

**நாளாந்த கலை நிகழ்ச்சிகள்.**

முழவதும் பல்வேறு பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள் நடைபெறும்.இதில் இலங்கையின் பாரமபரிய கலைகளையும் நவீன ஆக்கப்பூர்வமான அம்சங்களையும் இணைத்த வகையிலான இரவு நேர நிகழ்ச்சிகள் மற்றும் கலைநிகழ்ச்சிகளும் அடய்கும்.மேலும், கலாசார தினம் மற்றும் சர்வதேச கலாசார இரவு போன்ற உலகளாவிய பன்முகத்தன்மையைக் கொண்டாடும் நிகழ்ச்சிகளும்,பல்வேறு உள்ளுர் மரபுகளைப் போற்றும் நிகழ்வுகள் மற்றும் உலக சாரணர் அமைப்புடன் தொடர்புடைய (World Scout Centre) செயல்பாடுகளும் நடாத்தப்படும்.

**விசேட நிகழ்ச்சி**

சாரணர் தலைவர்கள் ஒன்று கூடல், கில்வெல் உறுப்பினர்களின் ஒன்று கூடல், மற்றும் யுவுயுளு உறுப்பினர்களின் நட்புறவு ஒன்று கூடல் போன்ற நிகழ்ச்சிகள் மூலம், நல்லுறவுகளையும் நட்புறவு வலையமைப்பையும் சிறப்பு நிகழ்ச்சிகள் வாய்ப்புகளை வழங்கவும் உள்ளது.

**சாரணர் செயல்பாடுகள்**

சாரணர் செயல்பாடுகள் பின்வரும் பகுதிகளில் பலதரப்பட்ட நடவடிக்கைகளாக மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளன.

- சவால் செயல்பாட்டு வலயம்
- நீர் செயல்பாட்டு வலயம்
- வான்வழி ஆய்வு நடவடிக்கைகள்
- ஜம்போரி கண்காட்சிகள்
- சமயம் மற்றும் கலாச்சார நிகழ்ச்சிகள்
- புத்தாக்க கண்காட்சிகள்
- தீப்பாசறை

**வெளிப்புற ஆய்வு**



65/9, Sir Chittampalam A Gardiner Mawatha, Colombo 02, Sri Lanka +94 112 433 131 / 512 info@jamboree.scout.lk jamboree.scout.lk

- பண்பாட்டுத் தலங்களைக் காணுதல்
- கொழும்பு நகர எல்லைக்குள் உள்ள பல்வேறு இடங்களைக் காணுதல் (சுவாரஸ்யமான இடங்கள், தொல்பொருள் அருங்காட்சியகங்கள், கொழும்புத் துறைமுகம், மற்றும் தாமரைக் கோபுரம் போன்றவை)
- சுற்றுச் சூழல் கண்காணிப்புக் களப்பணயங்கள்.

**சமூக சேவைத்திட்டங்கள்**

உள்ளூர் சமூகத்திற்கு ஆதரவளிப்பதற்காக செயல்படுத்தப்படும் அர்த்தமுள்ள சேவை மற்றும் சமூக ஈடுபாட்டுத் திட்டங்கள், ஜனாதிபதி செயலகத்தால் செயல்படுத்தப்படும் தூய்மையான இலங்கை Clean Sri Lanka முன்னெடுப்புடன் ஐககோர்த்தல், நிலையான அபிவிருத்தி இலக்குகளை நோக்கிய பல்வேறு திட்டங்களைத் தொடங்கும் என எதிர்ப்பார்க்கப்படுகின்றது.

**மாவட்டக் குழுப் பதிவு**

**சாரணர் பிரிவு**

- **வயதெல்லை :-** தகைமையுடைய சாரணர்கள் 2026 செப்டெம்பர் 30 ஆகும் போது, குறைந்த பட்சம் 11 வயது மற்றும் 18 வயதுக்கு உட்பட்டவர்களாக இருக்க வேண்டும்.
- **தகைமை** :- 2026 செப்டெம்பர் 30 க்கு முன்னர் சாரணர் விருதைப் பெற்றுள்ள (Scout Award) கனிஸ்ட அல்லது சிரேஷ்ட சாரணர்களை **மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள ஒதுக்கீட்டின்** படி மாவட்டங்கள் பதிவினை மேற்கொள்ளலாம்.
- **குழுவின்** அளவு :- 50 ஆண்சாரண்கள் அல்லது பெண் சாரணர்களைக் கொண்ட குழுக்களாகப் பதிவு செய்தல் வேண்டும்.
- **அலகு தலைவர்கள்** : 50 ஆண் சாரணர்கள் அல்லது பெண் சாரணர்கள் கொண்ட ஒவ்வொரு குழுவிற்கும் குறைந்தபட்சம் 2 மற்றும் அதிகபட்சம் 5 (பிரிவுத்) (Unit Leaders) அலகு தலைவர்கள் பதிவு செய்யப்படல் வேண்டும்.
- **ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒதுக்கப்பட்டுள்ள ஒதுக்கீடு**

| District | The number of scouts who can join the District team | No. of Units (50 Scouts each) | Minimum No. of Unit Leaders | Maximum No. of Unit Leaders |
|---|---|---|---|---|
| Akk Kalmuni | 400 | 8 | 16 | 40 |
| Ampara | 50 | 1 | 2 | 5 |
| Anuradhapura | 150 | 3 | 6 | 15 |
| Avissawella | 100 | 2 | 4 | 10 |
| Badulla | 400 | 8 | 16 | 40 |
| Batticaloa | 350 | 7 | 14 | 35 |
| Chilaw | 50 | 1 | 2 | 5 |
| Colombo | 1,300 | 26 | 52 | 130 |
| Galle | 400 | 8 | 16 | 40 |
| Gampaha | 450 | 9 | 18 | 45 |
| Hambantota | 300 | 6 | 12 | 30 |
| Homagama | 400 | 8 | 16 | 40 |
| Jaffna | 300 | 6 | 12 | 30 |
| Kalutara | 400 | 8 | 16 | 40 |


65/9, Sir Chittampalam A Gardiner Mawatha, Colombo 02, Sri Lanka +94 112 433 131 / 512 info@jamboree.scout.lk jamboree.scout.lk

| | | | | |
|---|---|---|---|---|
| Kandy | 1,100 | 22 | 44 | 110 |
| Kankasanturai | 200 | 4 | 8 | 20 |
| Kegalle | 250 | 5 | 10 | 25 |
| Kilinochchi | 350 | 7 | 14 | 35 |
| Kurunegala | 600 | 12 | 24 | 60 |
| Mannar | 100 | 2 | 4 | 10 |
| Matale | 100 | 2 | 4 | 10 |
| Matara | 400 | 8 | 16 | 40 |
| Monaragala | 200 | 4 | 8 | 20 |
| M/Piliyandala | 250 | 5 | 10 | 25 |
| Mullativu | 50 | 1 | 2 | 5 |
| Nawalapitiya | 50 | 1 | 2 | 5 |
| Negombo | 250 | 5 | 10 | 25 |
| Nuwara Eliya | 150 | 3 | 6 | 15 |
| P/Horana | 300 | 6 | 12 | 30 |
| Point Perdo | 100 | 2 | 4 | 10 |
| Polonnaruwa | 100 | 2 | 4 | 10 |
| Puttalam | 50 | 1 | 2 | 5 |
| Ratnapura | 350 | 7 | 14 | 35 |
| Trincomalee | 150 | 3 | 6 | 15 |
| Vavuniya | 200 | 4 | 8 | 20 |
| W/Ja-ela | 400 | 8 | 16 | 40 |
| Wennappuwa | 50 | 1 | 2 | 5 |
| **TOTAL** | **10,800** | **216** | **432** | **1,080** |

- **மாவட்ட முகாமைத்துவக் குழு (District Contingent Management Team):** ஒவ்வொரு மாவட்டங்களிலும் பின்வரும் பதவிகளுக்கு தலைவர்களை நிமிக்க வேண்டும்.
  - மாவட்ட குழுவுக்கான ஆலோசகர் மாவட்ட ஆணையாளர் (District Contingent Adviser)
  - மாவட்டத்தின் குழுத் தலைவர் (District Contingent Leader)
  - மாவட்டத்தின் பிரதி குழுத் தலைவர (Deputy Contingent Leader)
  - பதிவினை மேற்கொள்ளும் உத்தியோகத்தர் (Registration System Administrator)

**பதிவுக் கட்டணம்**

- **பதிவுக் கட்டணம் ரூபா 2500.00 (சாரணர்கள், பிரிவுத் தலைவர்கள் மற்றும் மாவட்ட முகாமைத்துவக் குழுவுக்கு**



65/9, Sir Chittampalam A Gardiner Mawatha, Colombo 02, Sri Lanka +94 112 433 131 / 512 info@jamboree.scout.lk jamboree.scout.lk

- **பதிவுப் பலன்கள் :-** பங்கேற்பாளர்கள் அனைவரும் ஜம்போரி நடவடிக்கைகளில் முழுப் பங்கேற்பு. ஆள் அடையாளத்தை ஊறுதிபடுத்த கைப்பட்டை,(wristband ID) செயல் பாட்டு கையேடு,(passbook ) ஜம்போரி கனணி பாவனை அல்லது மொபைல் பாவனை,(app) பங்கேற்பு மற்றும் செயற்பாட்டு சான்றிதழ்கள், ஜம்போரி பதக்கம் (Badge) மற்றும் செயல்பாட்டு விருதுகள் (Activity Award) ஆகியனவற்றைப் பெறுவார்கள்.
- **கட்டணம் செலுத்தும் முறை:** அறிவுறுத்தலின் படி பதிவினை நிறைவு செய்ததன் பின்னர் செலுத்தவேண்டிய முழுப் பதிவுக் கட்டணமும் ஒரே பற்றுச்சீட்டில் செலுத்தப்படல் வேண்டும்.
- **இந்**தப் பதிவுக் கட்டணத்தை பாடசாலை அபிவிருத்தி சங்க நிதியில் இருந்து அல்லது குழு உதவிக் குழுவின் மூலம் வசூலிக்க மாவட்டங்களில் ஏற்பாட செய்ய இயலும்.

**ஜம்போரி நுழைவுச் சீட்டுகள் :** சாரணர்களின் பதிவு,பணம் மற்றும் முகாம செலவுகளை ஈடுசெய்ய உதவும் வகையில் இதன் கீழ் ஜம்போரி உதவிச் சீட்டு (Jamboree Entrance Ticket) நிதி திறட்டும் திட்டம் தொடங்கப்பட உள்ளது. இந்த திட்டம் குறித்த சுற்றறிக்கை செப்டெம்பர் மாதம் முதல் வாரத்தில் வெளியடப்படும். பாடசாலை அபிவிருதத்திச் சங்க நிதி அல்லது குருவின் உதவிக் குழுவின் மூலம் இந்த நுழைவுச் சீட்டுக்களை விநியோகிக்க மாவட்டங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**11வது தேசிய சாரணர் ஜம்போரிக்கு (National Scout Jamboree) பதிவுக்கான ஆலோசனை.**

**பதிவினை மேற்கொள்வதற்கு முன்னர் பின்வரும் ஆலோசனைகளை நன்கு வாசித்து புரிந்து கொள்ளவும்.**

**மாவட்டத்தின் நிர்வாக கணக்கு :.** முன்னர் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள மாவட்ட பதிவாளர் பின்வரும் தகவல்களைப் பெறுவார்.

- உள்நுழைவு இணைப்பு (login link)
- பயனர் பெயர் (Username)
- கடவுச்சொல் (Password)

இந்த தகவல்கள் மாவட்டப் பதிவு இணையதளத்தை அணுக உங்களை அனமதிக்கும்.

**2. பதிவுத் தகவல்களை தேசிய தலைமையகத்திற்கு சமர்ப்பித்தல்.**

**பதிவு செய்யும் போது கீழே உள்ள நடைமுறையைப் பின்பற்றவும்.**
சாரணர்களின் தகவல் விபரங்களை உள்ளிட்டு இங்கு இணைக்கப்பட்டுள்ள ஜம்போரி பதிவினை Excel படிவத்தில் பூரணப்படுத்தப்படல் வேண்டும்.(Excel படிவம் பதிவினை மேற்கொள்ளும் போது மாவட்டத்தின் பதிவு அதிகாரிக்கு அனுப்புதல் வேண்டும்.)

மேலே உள்ள தகவல்களைப் பயண்படுத்தி ஜம்போரி பதிவு இணையத்தளம் வழியாக நிகழ்நிலை ஊடாக விண்ணபத்தை பூர்த்தி செய்யவும். ( இதற்காக ஒரு பயிற்சி அமர்வு நடாத்தப்படும்)

சகல தகவல்களும் சரியென சரிபார்க்கப்பட்ட, பூர்த்தி செய்யப்பட்ட எக்செல் தாளை 2026 செப்டெம்பர 30ம் திகதிக்கோ அல்லது அதற்கு முன்னரோ மின்னஞ்சல் **register@jamboree.scout.lk** ஊடாக தேசிய சாரணர்

தலைமையகத்திற்கு சமர்ப்பிக்க வேண்டும். மேலும் அந்த சகல ஆவணங்களும் இணையவழி ஊடாக 2026 செப்டெம்பர் 30 ம் திகதிக்க முன்னர் நிவர்த்தி செய்தல் வேண்டும்.

மாவட்டத்தின் பதிவுகள் அதிக எண்ணிக்கையில் இருந்தால், மாற்றுப் பதிவுக் கணக்குகள் கிடைக்ககூடும். இதற்கான கோரிக்கைகளை 11வது தேசிய ஜம்போரிபெதிவுக் குழுவிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

**3. ஜம்போரியில் கனணி அல்லது தொலைப்பேசி செயலி (App) வழியாக ஒரு சாரணர் கணக்கை (Scout Account) உருவாக்குதல்.**

பதிவு அமைப்பானது கணினி அல்லது தொலைப்பேசி செயலி வழியாக நிகழ்நிலை அணுகலைப் பயன்படுத்தி பதிவு செய்யப்பட்ட ஒவ்வொரு சாரணனுக்கும் தனித்தனியான கணக்கை உருவாக்க வேண்டும்.

**4. QR குறியீடு மற்றும் கடவச் சொல்.**

ஒரு சாரணர் கணக்கு உருவாக்கப்பட்டவுடன், ஒவ்வொரு சாரணருக்கும் தானாக உருவாக்கப்படும் QR குறியீடு மற்றும் கடவுச்சொல்லை (10 இலக்கங்கள் கொண்டதாக இருக்க வேண்டும்) அந்தந்த சாரணனிடம் வழங்கப்பட வேண்டும்.

**5. ஜம்போரிக்கான சாரணர் பதிவு**

ஆரம்ப பதிவை முடித்த ஒவ்வொரு சாரணரும் www.Jamboree.scout.lk இல் வழங்கப்பட்டுள்ள QR குறியீடு (பங்கேற்பாளர் குறியீடு) பிறந்த திகதி மற்றும் கடவுச் சொல் (OTP) ஆகியவற்றைப் பயன்படுத்தி பதிவை முடிக்க வேண்டும். இங்கெ தனிப்பட்ட கணக்கை மின்னஞ்சல் அல்லது கூகுள் கணக்கு மூலம் அணுகலாம்.

**6. சாரணர் தகவல்களைப் பூர்த்தி செய்தல்**

தனிப்பட்ட கணக்கில் உள்நுழைந்த பிறகு இதைச் செய்ய வேண்டாம்

- அவர்களின் தனிப்பட்ட தகவல்களைச் சரிபார்க்கவும்.
- குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் (2026 செப்டெம்பர் 30 அல்லது அதற்கு முன்) தேவையான அனைத்து


தகவல்களையும் பூர்த்தி செய்யவும்.

**7. ஜம்போரி பதிவுக் கட்டணம் செலுத்ததல்.**

பதிவை முடித்த பின்னர் (2026 செப்டெம்பர் 30 அல்லது அதற்கு முன்) பதிவு செய்த பங்கேற்பாளர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் செலத்த வேண்டிய மொத்தப் பதிவு கட்டணம் 11வது தேசிய சாரணர் ஜம்போரி பதிவுக் குழுவிற்கு ஒரே பற்றுச்சீட்டில் அனுப்பப்படல் வேண்டும். உரிய மாவட்டம் உரிய காலத்திற்குள் கட்டணத்தைச் செலுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.


**ஜம்போரி கணினி அல்லது மொபைல் செயலி மூலம் அணுகுவது எப்படி.**

**படிமுறை** -1 மாவட்ட உள்நுழை





**படிமுறை** 2 கணினியில் உள்நுழைந்த பிறகு, மாவட்ட அதிகாரிகளைச் சேர்க்கவும்.



65/9, Sir Chittampalam A Gardiner Mawatha, Colombo 02, Sri Lanka +94 112 433 131 / 512 info@jamboree.scout.lk jamboree.scout.lk




**படிமுறை** 3 உங்களின் மாவட்ட குழு அல்லது பாடசாலையை இணைத்துக் கொள்ளவும்.





**படிமுறை** 4 மேலும், தங்களால் சேர்த்துக் கொள்ளப்பட்ட குழுப் பட்டியல் தொடர்பான இந்த அணுகல் (Access ID) மற்றும் கடவுச் சொல்லை (Password) தங்கள் மாவட்டத்தின் சாரணர் தலைவருக்கு அனுப்பவும்.







65/9, Sir Chittampalam A Gardiner Mawatha, Colombo 02, Sri Lanka +94 112 433 131 / 512 info@jamboree.scout.lk jamboree.scout.lk


**படிமுறை : 5 :** தங்களின் சாரணர்கள் மற்றும் தலைவர்களை உள்ளிட((Troop Login) ஊடாக பயன்படுத்தவும். அணுகல் அடையாள அட்டை (Access ID) மற்றும் கடவுச் சொல்லைப் (Password) பயன்படுத்தி உள்நுழைக.





**படிமுறை 6** தங்கள் சாரணர்களைப் பதிவு செய்யுங்கள்.ஒவ்வொரு சாரணருக்கும் ஒரு QR குறியீடு கிடைக்கப்படும். அந்த ஞசு குறியீட்டைப் பதிவிறக்கம் செய்மு, அந்தந்த சாரணரின் ஸம்போரி செயல் பாட்டு கையேட்டில் (Passbook) ஒட்டவும்.





**படிமுறை 7** பதவு செய்யப்பட்ட ஒவ்வொரு சாரணருக்கும் ஒருமுறை செயல்படுத்தும் OTP எண் தானாகவே உருவாக்கப்படும். இந்த OTP எண், சாரணர் கணக்கைச் செயல்படுத்தும் செயல்முறைக்குப் யன்படுத்தப்படுவதுடன், பதிவுப் பட்டியலிலும் காட்டப்படும்..




**படிமுறை 8** இது நீங்கள் பதிவு செய்த சாரணர்களின் படடியல்,இந்தப் பட்டியலில் ஒவ்வொரு சாரணரின் வழபரங்கள்,QR குறியீட மற்றும் செயல்படுத்தும் OTP ஆகியவற்றைக் காணலாம்.மேலும், நீங்கள் சாரணரின் விபரங்களைத் திருத்தலாம்.ஒரு பதிவை நீக்கலாம் மற்றும் சாரணரின் ஜம்போரி கையேட்டில் (Passbook) ஒட்டுவதற்காக QR குறியீட்டைப் பதிவிறக்கம் செய்யலாம்.





**படிமுறை 9** பிரிவுத் (அலகு) தலைசர்களை சேர்க்கவும். ஒவ்வொரு பிரிவுக்கும் 50 சாரணர்கள் ஒதுக்கப்படுவார்கள்.ஒவ்வொரு பிரிவிலும் குறைந்தபட்சம் இரண்டு தலைவர்களும், அதிகபட்சம் ஐந்து தலைவர்களும் இருக்க வேண்டும.





**படிமுறை** 10 இது உங்கள் பதிவு செய்யப்பட்ட பிரிவுத் (Unit Leaders) தலைவர்களின் பட்டியல். இந்தப்பட்டியலில், ஒவ்வொரு தலைவரின் விபரங்கள், QR குறியீடு மற்றும் செயல்படுத்தும் OTP ஆகியவற்றைக் காணலாம். செயல்படுத்தும் OTP ஐப் பயன்படுத்தி, தங்களின் தலைவரின்


விபரங்களைத் திருத்தலாம். ஒரு பதிவை நீக்கலாம் மற்றும் தலைவரின் கணக்கைச் செயல்படுத்தலாம்.




**படிமுறை** 11 ஒவ்வொரு குழுவுக்குமான (Troop) பதிவுக்கட்டணங்களின் சுருக்கமாகும். நீங்கள் பதிவக் கட்டணப் பட்டியலை (PDF) பதிவறக்கம் செய்து, அதில் குறிப்பிடப்பட்டுள்ள வங்கிக் கணக்கில் உரிய தொகையைச் செலுத்தி, பணம் செலுத்தும் செயல் முறையை நிறைவு செய்ய, கட்டண பற்றுச்சீட்டை தலைமையத்திற்கு (HQ) அனுப்பலாம். அல்லது நேரில் வழங்கலாம்





**படிமுறை** 12 இது கணக்கைச் செயல்படுத்துவதற்கான உள்நுழைவு செயல்முறையாகும். சாரணர் அல்லது தலைவரின் QR குறியீட்டை உள்ளிட்டு, செயல்படுத்தும் செயல்முறையைத் தொடரவும்.




**படிமுறை** 13 இது செயல்படுத்தலை உறுதிபடுத்தும் செயல்முறையாகும். தேவையான விபரங்களை நிரப்பி, ஒரு முறை செயல்படுத்தும் OTP ஐ (One Time Activate OTP) உள்ளிட்டு, மீதமுள்ள விபரங்களைப் பூர்த்தி செய்யவும். உறுதிப்படுத்தலுக்குப் பிறகு, உங்கள் கணக்கு செயல்படுத்தும் செயல்முறை நிறைவடையும். கணக்க செயல்படுத்தப்பட்டவுடன், உங்கள் Jamboree செயல்முறை (App) உள்நுழைந்து தங்களின் முன்னேற்றம், ஜம்போரி செயல்பாடுகள் மற்றும் ஏனைய தொடர்புடைய விபரங்களைக் காண ஜம்போரி செயலியலில் உள்நுழையலாம்.



65/9, Sir Chittampalam A Gardiner Mawatha, Colombo 02, Sri Lanka +94 112 433 131 / 512 info@jamboree.scout.lk jamboree.scout.lk




**11வது தேசிய சாரணர் ஜம்போரி 2027 - குருளைச் சாரணர் சாகச தினம் (Cub Scout Adventure Day)**

நாடு முழுவதும் உள்ள குருளைச் சாரணர்களுக்கு ஒரு தனித்துவமான சாரணர் அனுபவத்தை வழங்கும் பொருட்டு குருளைச் சாரணர் சாகச (**Cub Scout Adventure Day**)தின நிகழ்வானது 2027 ஜனவரி 20 மற்றும் 21ம் திகதிகளில் காலை 8.00 மணி முதல் மாலை 4.00 மணிவரை ஹோமாகம, தியகமவில் உள்ள மஹிந்த ராஜபக்ஷ விளையாட்டு வளாகத்தில் நடாத்துதவற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

தங்கள் மாவட்டத்தில் உள்ள குருளைச் சாரணர்களை இந்த நிகழ்ச்சிக்காகப் பதிவு செய்ய விரும்பும் மாவட்ட சாரணர் சங்கங்கள் 2026 செப்டெம்பர் மாதம் 30ம் திகதிக்குள் பதிவு செயல்முறையை நிறைவு செய்தல் வேண்டும்.

**மாவட்ட குழுவை பதிவு செய்தல்.**

**குருளைச் சாரணர் பிரிவு**

- **வயதெல்லை** :- தகைமையடைந்துள்ள குருளைச் சாரணர்கள் 2026 செப்டெம்பர் 30ம் திகதிக்கு 11வயதை கொண்டிருத்தல் வேண்டும்.⁚.
- **தகைமை** :- 2026 செப்டெம்பர் 30ம் திகதியில் வெண்கல நட்சத்திர விருதை (Bronze Star Award) முடித்துள்ள சகல குருளைச் சாரணர்களையும் மாவட்டத்தில் பதிவு செய்யலாம்.
- **சாரணத் தலைவர்கள்** :- ஒவ்வொரு ஐந்து குருளை சாரணர்களுக்கும் குறைந்த பட்சம் ஒரு குருளை சாரணத் தலைவர் மற்றும்/அல்லது ஒரு பெற்றோர் ஒருங்கணைப்பாளரை மாவட்டம் நியமித்து பதிவு செய்தல் வேண்டும்.

**பதிவு மற்றும் கட்டணம்**

- பதிவுக் கட்டணம் ரூபா 1.000.00 (குருளை சாரணர்கள், குருளை சாரணர் தலைவர்கள்,மற்றும் ஒருங்கிணைப்பு பெற்றோர்கள் உட்பட சகலருக்கும்)

- பதிவு கட்டணத்தில் நீங்கள் பெறுபவை. தெரிந்தெடுக்கப்பட்ட திகதிகளில் (2027 ஜனவரி 20 அல்லது 21, திகதிகளில்) நடைபெறும் குருளை சாரணர் சாகச நிகழ்வுகளில் (Cub Scout Adventure Day) பங்கேற்கும் வாய்ப்பு, அதிகாரப்பூர்வமான செயல்பாட்டு அட்டை, )Official Activity Card) ,பங்கேற்புச் சான்றிதழ் மற்றும் ஜம்போரி பதக்கம், (badge) என்பன கிடைக்கும்.
- **கட்டணம் செலுத்தும் முறை** :-கொடுக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய பதிவை முடித்த பன்னர், செலுத்தப்பட வேண்டிய மொத்தப் பதிவுக் கட்டணத்தையும் ஒரே பற்றுச்சீட்டாக மாவட்டங்களுக்கு அனுப்பப்படும். இந்த பதிவுக் கட்டணத்தை பாடசாலை அபிவிருத்தி சங்க நிதியில் இருந்து அல்லது குழு நனகொடையாளர்களிடம் இருந்து செலுத்த முடியும்.

**பதிவு செய்வதற்கான வழிமுறைகள்**

பதிவு செய்வதற்கு முன்னர், பின்வரும் வழிமுறைகளைக் கவனமாகப் படித்துவிட்டுப் பதிவு செய்யவும்.

**பதிவு செய்தல்**:-

பதிவினை மேற்கொள்ளும் அலுவலர் ஊடாக குருளை சாரணர் விபரங்களை உள்ளடக்கி, இத்துடன் இணைக்கப்பட்டுள்ள ஜம்போரி பதிவு Excel படிவத்தினை பூர்த்தி செய்தல் வேண்டும்.(Excel படிவம் மாவட்ட பதிவு அலுவருக்கு அனுப்பப்படும்.)

**பதிவுத் தகவல்களை தேசிய தலைமையகத்திற்கு சமர்ப்பித்தல்:**

பூர்த்தி செய்யப்பட்ட சகல தகவல்களும் சரிபார்த்த பின்னர் Excel படிவத்தினை 2026 செப்டெம்பர் 30ம் திகதியோ அல்லது அதற்கு முன்னரோ தேசிய சாரணர் தலைமையகத்திற்கு மின்னஞ்சல் **register@jamboree.scout.lk** வழியாக அனுப்புதல் வேண்டும்.

**ஜம்போரி பதிவுக் கட்டணம் செலுத்துதல் :-**

பதிவினை மேற்கொண்டதன் பின்னர் (2026 செப்டெம்பர் 30 திகதிக்கோ அதற்கு முன்னரோ) பதிவு செய்த பங்கேற்பாளர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் செலுத்த வேண்டிய மொத்தப் பதிவு கட்டணத்தை ஒரே பற்றுச்சீட்டில் 11வது தேசிய சாரணர் ஜம்போரி மாவட்ட பதிவுக் குழுவால் அனுப்பப்படும். மாவட்டங்கள் உரிய காலத்திற்குள் கட்டணத்தைச் செலுத்த ஏற்பாடு செய்ய வேண்டும்.

தகுதியுள்ள சகல குருளை சாரண்களையும் இந்த எற்சாகமான தேசிய சாரணர் நிகழ்ச்சியில் பங்கேற்கும் சாகசம் புதிய கற்றல் வாய்ப்புகள்,நட்பு மற்றும் சாரணர் இயக்கத்தின் உண்மையான அனுபவம் நிறைந்த ஒரு நாளைக் கழிக்க அழைக்கின்றோம்.

**இலங்கை சாரணர் சங்கத்தின் 3வது தேசிய கிடோரி (3rd National Kiddoree) நிகழ்ச்சிகள்**.

3வது தேசிய கிடோரி நிகழ்ச்சியானது, 11வது தேசிய சாரணர் ஜம்போரியின் ஒரு சிறப்பு நிகழ்ச்சியாகும். 2027 ஜனவரி 19ம் திகதி ஹோமாகம தியகம, மஹிந்த ராஜபக்ஷ விளையாட்டு வளாகத்தில் நடைபெற உள்ளது. கிடோரி நிகழ்ச்சியான பதிவுச் செயன் முறையானது இதற்கு முன்னர் வெளியிடப்பட்ட தேசிய கிடோரி சுற்றிக்கையின் படி மேற்கொள்ளப்படும். பங்கேற்பாளர்கள் அனைவரும் அந்த சுற்றறிக்கையில் கொடுக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைப் பின்பற்றுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறீர்கள்.

- ஜம்போரி சேவைக் குழு (JST)

ஜம்போரி சேவைக் குழுவில் (JST) உறுப்பினர்களாக பணியாற்ற விரும்பும் ஜனாதிபதி சாரணர்கள், திரிசாரணர்கள் மற்றும் வயது வந்த தலைவர்கள் தத்தமது மாவட்ட ஆணையாளர்கள் ஊடாக விண்ணப்பிக்கலாம்.

- வயது வந்த தலைவர்கள், தேசிய சாரணர் தலைமையகத்தினால் வழங்கப்பட்டுள்ள ஆணைப்பத்திரம் அல்லது தேசிய பயிற்சி பிரிவில் வழங்கப்பட்ட கடமை வழங்கும் அதிகாரக் கடிதம்,பணி நியமனக் கடிதத்தை வைத்திருத்தல் வேண்டும்.
- **வயதெல்லை** :- 2027 ஜனவரி 17ம் திகதிக்கு 18 வயதை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
- **தகைமை**:- விண்ணப்பத்தை சம்பந்தப்பட்ட மாவட்ட ஆணையாளரால் பரிந்துரைக்கப்பட்டு அங்கிகரிக்கப்படல் வேண்டும்.
- **பதிவுக் கட்டணம்** :- ரூபா 2500.00
- பதிவுக்கட்டணத்தில் பெறும் நன்மைகள்:- அதிகாரப்பூர்வ ஜம்போரி குழு சீருடை, சேவையின் போது உணவு,ஜம்போரி இளைஞர் முகாமில் தங்குமிடம், பங்கேற்பச் சான்றிதழ், ஜம்போரி சின்னம் என்பன.
- **கட்டணம் செலுத்தும் முறை** :- அறிவுறுத்தல்களின் படி பதிவை நிறைவு செய்து, பொருந்தக் கூடிய கட்டணத்தை செலுத்தவும்.
- மேற்கண்ட தகவல்களை கொண்டுள்ளவர்கள் இந்த ஜம்போது சேவைக் குழுவில் (JST) பதிவு செய்துக் கொள்ளலாம்.

**பதிவுக்கான வழிமுறைகள்**

பதிவினை மேற்கொள்வதற்கு முன்னர் பின்வரும் வழிமுறைகளை கவனமாகப் படிக்கவும்.

**பதிவு செய்தல்** :-

(பதிவிறக்கம் இணைப்பு) இருந்து துளுவு விண்ணப்பத்தை பதிவிறக்கம் செய்து, சம்பந்தப்பட்ட மாவட்ட ஆணையாளரின் பரிந்துரை மற்றும் ஒப்புதலுடன் அதனை பூர்த்தி செய்யவும்

**ஜம்போரி பதிவுக் கட்டணம்.:-**

விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையை 2026 செப்டெம்பர் மாதம் 30ம் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் தேசிய சாரணர் தலைமையக கணக்கில் வைப்பிலிடவும்.

**தேசிய தலைமையகத்திற்கு பதிவுகளை சமர்ப்பித்தல்:-**

முறையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்ப படிவத்தினை, பதிவு கட்டணம் செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டுடன் 2026 செப்டெம்பர் மாதம் 30ம் திகதிக்கோ,அதற்க முன்னரோ மின்னஞ்சல் வாயிலாக தேசிய சாரணர் தலைமையகத்திற்கு அனுப்புதல் வேண்டும்.

ஜம்போரி சேவைக் குழு உறுப்பினர்களுக்கான விண்ணப்பங்கள் மற்றும் செயல் பாட்டுத் தேவைகள் தொடர்பாக மீளாய்வு செய்ததன் பின்னர், 2026 ஒக்டோபர் மாதம் மூன்றாம் வாரத்திற்குள் பிரிவுகளுக்கு ஒதுக்கப்படுவார்கள்.

ஜம்போரியின் போது தீங்கிலிருந்து பாதுகாப்பு (Safe from Harm)

11வது தேசிய சாரண் ஜம்போர முழுவதும் சகல பங்கேற்பாளர்களுக்கும் பாதுகாப்பான சூழலை உருவாக்குவதில் இலங்கை சாரணர் சங்கம் உறுதியாக உள்ளது.

இலங்கை சாரணர் சங்கத்தின் தீங்கிலிருந்து பாதுகாப்பு கொள்கையின் (Safe from Harm) படி 18 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட சகல பங்கேற்பாளர்களும், தலைவர்களும் ஜம்போரிக்கு முன்னர் தீங்கிலிருந்து பாதுகாப்பு (Safe from Harm) இணைவழிப் பயிற்சி வகுப்பை வெற்றிகரமாக நிறைவு செய்வது கட்டாயமாகும். (**www.scout.edu.lk**)



65/9, Sir Chittampalam A Gardiner Mawatha, Colombo 02, Sri Lanka +94 112 433 131 / 512 info@jamboree.scout.lk jamboree.scout.lk

இது தொடர்பாக ஒரு விரிவான சுற்றறிக்கை உரிய நேரத்தில் வெளியிடப்படும்.. இது தொடர்பாக சகல மாவட்ட ஆணையாளர்கள் மற்றும் தலைவர்களின் ஒத்துழைப்பை பெரிதும் பாராட்டுகின்றது.

சாரணரர் ஜம்போரியில் பங்கேற்கும் சகல பங்கேற்பாளர்களுக்கும் பாதுகாப்பான மற்றும் நேர்மறையான சூழலைப் பேணுவது அவசியமானதால், இந்தத் தேவை பூர்த்தி செய்யப்படுவதை உறுதி செய்வதில் சகல மாவட்ட ஆணையாளர்கள் மற்றும் தலைவர்களின் ஒத்துழைப்பு பெரிதும் மெச்சப்படுகின்றது.



65/9, Sir Chittampalam A Gardiner Mawatha, Colombo 02, Sri Lanka +94 112 433 131 / 512 info@jamboree.scout.lk jamboree.scout.lk